# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 14,921/6 —1970 සැප්තැම්බර් 4 වැනි සිකුරාදා — 1970.9.4

14,921/6 ம் இலக்கம் —1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)

## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 270/2

ச. வ./பி. 88–48

ம. தே. அ. எண் : சி. 31

### 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 49 (3) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணத்தைக் கொண்டு அப்பதவிக்குரிய பணிகளை இலங்கையிற் புரிவதற்கு அவர் இயலாதிருப்பதனால் :

இப்பொழுது, மகாதேசாதிபதி வில்லியம் கொபல்லவ ஆகிய நான், 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 49 (3) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இலங்கைக்குத் திரும்பும்வரை பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சராக இலங்கையிற் செயலாற்றுவதற்கென நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவழிகள் அமைச்சரை இத்தால் நியமிக்கின்றேன்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1970 செத்தெம்பர் 4.

டபிள்யூ. கொபல்லவ,
மகாதேசாதிபதி.

9–475

---

1970 இன் இல. 270/3

ம. தே. அ. எண் : சி. 314/70 (2)

1946 ஆம், 1947 ஆம் ஆண்டின் இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப் பேரவைக் கட்டளைகளின் 46 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் நியமனங்களைச் செய்வதில் மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சி அடைகின்றார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது :

| | | |
|---|---|---|
| 1. | திட்டமிடல், வேலைவாய்ப்பு கௌரவ அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி, பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ரத்ன தேஷப்பிரிய சேனநாயக்க அவர்கள் | திட்டமிடல், வேலைவாய்ப்பு அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க அவர்கள் இத்தீவினை வந்தடையும் வரை, திட்டமிடல், வேலைவாய்ப்பு அமைச்சராக பதிற் கடமையாற்றக்கடவர் |
| 2. | வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார கௌரவ அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி, பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பஹால ருள்ளாகே ரத்னாயக்க அவர்கள் | வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ திக்கிரி பண்டா இலங்கரத்ன அவர்கள் இத்தீவினை வந்தடையும் வரை, வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சராக பதிற் கடமையாற்றக்கடவர் |
| 3. | பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார கௌரவ அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி, பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வில்லியம் நீல் த அல்விஸ் அவர்கள் | பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ பீலிக்ஸ் றெஜினல்ட் டயஸ் பண்டாரநாயக்க அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சராக பதிற் கடமையாற்றக்கடவர் |

அதி உத்தமரின் கட்டளைப்படி,

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1970 செத்தெம்பர் 4.

டி. ஜி. தயாரத்ன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

9–480

# அரசாங்க அறிவித்தல்கள்

## பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, முதலமைச்சர் சிறிமாவோ ரத்வத்த டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், இலங்கையில் நான் இல்லாத காலத்தில் மேற்கூறிய 5 ஆம் பிரிவின் கீழ் எனக்குப் பதிலாகக் கடமையாற்றுவதற்கு நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சருக்கு இத்தால் அதிகாரமளிக்கிறேன்.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 4.

சிறிமா ஆர். டீ. பண்டாரநாயக,
முதலமைச்சர்.

9–476/1

---

## 1946, இலங்கை (அரசமைப்பு) அரசப்பேரவைக் கட்டளை 47 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டபடியான 1946, இலங்கை (அரசமைப்பு) அரசப்பேரவைக் கட்டளையின் 47 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, முதலமைச்சரும், பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சருமான சிறிமாவோ ரத்வத்த டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், இலங்கையில் நான் இல்லாத காலத்திற்கு, ஜயகொடி ஆரச்சிகே லக்ஷ்மன் ஜயகொடி, எனது பாராளுமன்றச் செயலாளருக்கு, 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாருன (40 ஆம் அத்தியாயமான) பொதுசனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பகுதி III ஆல் எனக்கு அளிக்கப்பட்ட அல்லது என்மேல் விதிக்கப்பட்ட சகல அதிகாரங்களையும் கடமைகளையும், இவ்வறிவித்தல் மூலம் கையளிக்கிறேன்.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 4.

சிறீமா ஆர். டீ. பண்டாரநாயக,
முதலமைச்சரும், பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள்
அமைச்சரும்.

9–476/2

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.